Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 241/2020 PW-5**

Name : ஜானகிராமன்
Father / Husband name : ராதாகிருஷ்ணன்
Village : சாரம்
Age : 43
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 17.12.2025

Accused absent. Petition u/s 317 CrPC filed and allowed. Defence counsel present.

**E summon not served. Copy of Adhar Card filed.**

**முதல் விசாரணை**

நான் கொத்தனார் வேலை செய்துவருகிறேன். சாட்சி துரை என்பவரை எனக்கு தெரியாது, சம்பவத்தியிடத்தில் கையொப்பம் செய்யும்போது பார்த்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 28.10.2019 அன்று இரவு சுமார் 7 மணியளவில் நான் சாரத்திலுள்ள ரெட்டியார் ரைஸ்மில் எதிரில் கடைக்கு சென்றபோது அந்தயிடத்தில் ஒலக்கூர் போலிசார் விபத்து வழக்கு சம்மந்தமாக வரைபடம் போட்டு என்னிடமும் அங்கிருந்த துரை என்பவரிடம் கையொப்பம் வாங்கினார்கள். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். **பார்வை மகசரில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எந்த தேதியில் கையொப்பம் செய்தேன் என்றால் 28.10.2019. எத்தனை மணிகது சென்றேன் என்றால் இரவு 7 மணி. சாட்சி துரை என்பவர் எங்கள் ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான், கையொப்பம் செய்யும்போது பார்த்தேன். நானும்

துரையும் அந்தயிடத்தில் பேசிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். போலிசார் என்ன படம் வரைந்தார்கள் அதிலுள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, விபத்து வழக்கு சம்மந்தமாக எழுதியிருந்தார்கள். நான் விபத்து குறித்து சொன்னேனா என்றால் இல்லை. போலிசார் சாட்சியாக இருக்கக்கேட்டதால் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான், என்முன்பாக ஸ்கெட்ச் போட்டார்கள். என்னை விசாரித்த போலிசாரின் பெயர், பதவி தெரியுமா என்றால் தெரியாது, ஒலக்கூர் போலிசார் விசாரித்தார்கள். அதன் பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் போலிசார் வரைபடம் வரையில்லை, நான் போலிசாரின் கையிருப்பு சாட்சி, போலிசார் கேட்டுக்கொண்டதால் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**